## பட்டினப்பாக்கம்: முதலமைச்சர் தனது வேலையைப் பார்க்கத்தான் தலைமைச் செயலகம்;

# முதலமைச்சர் கடலைப் பார்ப்பதற்காக அல்ல!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கடும் விமர்சனம்!

சென்னை, செப். 23-

“முதலமைச்சர் தனது வேலையைப் பார்க்கத்தான் தலைமைச் செயலகம்; கடலைப் பார்ப்பதற்காக அல்ல” என்று கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பட்டினப்பாக்கத்தில் தலைமைச் செயலகம் அமைப்பது குறித்து கடும் விமர்சனம் செய்துள்ளார்.

இதுகுறித்து அவர் சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

**பட்டினப்பாக்கத்தில் யார் சொல்லி அமைகிறது புதிய தலைமைச் செயலகம்?**

**அரசாணை வெளியிட்டுவிட்டு இன்னும் முடிவு செய்யவில்லை எனப் பேசுவது யாரை ஏமாற்ற?**

**முதலமைச்சர் தனது வேலையைப் பார்க்கத்தான் தலைமைச் செயலகம்; கடலைப் பார்ப்பதற்கல்ல!**

**மீனவர்களின் வாழ்விடத்தையும் வாழ்வாதாரத்தையும் அழித்துவிட்டு, போக்குவரத்து நெரிசல் மிக்க இடத்தில் அமையும் தலைமைச் செயலகம் வேண்டாம்!**

**ஆட்சி அமைய ஆதரவளித்த கட்சிகளே போராட்டம் நடத்தியும் அரசாணையைத் திரும்பப் பெறாத த.வெ.க. அரசின் ஆணவத்தை அடக்குவோம்.**

**மீனவச் சகோதரர்களின் போராட்டத்துக்குத் தி.மு.கழகம் துணைநிற்கும்!**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வதைளத்தில் பதிவிட்டுள்ளார்.




### தேர்தல் நடத்தை விதிமுறைகளுக்கு எதிரான

# த.வெ.க. நட்சத்திரப் பேச்சாளர்கள் பட்டியலை ரத்து செய்க!

### தலைமைத் தேர்தல் ஆணையருக்கு – கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கடிதம்!



**சென்னை, செப். 23-**

**மதுராந்தகம், தாராபுரம் ஆகிய தொகுதிகளில் அக்டோபர் 6, 2026 அன்று நடைபெறவுள்ள இடைத்தேர்தலையொட்டி, தமிழக வெற்றிக் கழகம் வெளியிட்டுள்ள நட்சத்திரப் பிரச்சாரகர்கள் பட்டியலை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்று தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர், தேர்தல் ஆணையர்கள் மற்றும் தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் புகார் அளித்துள்ளார்.**

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951ன் 77வது பிரிவையும் மாதிரி நடத்தை விதிமுறைகளையும் மீறி இந்தப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளதாக அவர் தனது புகாரில் தெரிவித்துள்ளார். மேலும், பிற அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் தமிழக வெற்றிக் கழகத்தின் நட்சத்திரப் பிரச்சாரகர்களாகப் பட்டியலிடப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்தப் பட்டியலில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாணிக்கம் தாகூர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த தொல். திருமாவளவன், வன்னியரசு, ரவிக்குமார் எம்.பி., சிந்தனைச் செல்வன், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த வைகோ, துரை வைகோ மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியைச் சேர்ந்த பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் ஆகியோர் இடம்பெற்றுள்ளதாக புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951ன் 77(1)வது பிரிவில், ஒரு அரசியல் கட்சியின் தலைவர்கள் மேற்கொள்ளும் பயணச் செலவுகள், குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு, தனிப்பட்ட வேட்பாளரின் தேர்தல் செலவுக் கணக்கில் சேர்க்கப்படாமல் இருப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஆர்.எஸ். பாரதி தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்டப்பிரிவில் “ஒரு அரசியல் கட்சியின் தலைவர்கள்” மற்றும் “அந்த அரசியல் கட்சியின்” என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ள நிலையில், ஒரு அரசியல் கட்சி தனது சொந்தக் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் மற்றும் நிர்வாகிகளை மட்டுமே நட்சத்திரப் பிரச்சாரகர்களாக அறிவிக்க முடியும் என்றும், மற்றொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் அல்லது நிர்வாகிகளை தனது நட்சத்திரப் பிரச்சாரகர்களா கப் பட்டியலிடுவதற்கு சட்டத்தில் எந்த ஏற்பாடும் இல்லை என்றும்

இந்திய தேர்தல் ஆணையம் அவ்வப்போது வெளியிடும் வழிகாட்டுதல்களின்படியும், ஒரு அரசியல் கட்சி தனது வேட்பாளர்களுக்காகப் பிரச்சாரம் செய்யும் தனது சொந்தக் கட்சித் தலைவர்களின் பெயர்களை மட்டுமே நட்சத்திரப் பிரச்சாரகர்கள் பட்டியலில் இடம்பெறச் செய்ய வேண்டும் என்றும்

கூட்டணிக் கட்சிகளைப் பொறுத்தவரையிலும், ஒரு கட்சியின் தலைவரை மற்றொரு கட்சியின் அதிகாரப்பூர்வ நட்சத்திரப் பிரச்சாரகராக அறிவிப்பது, தேர்தல் செலவுக்கான விலக்குகளைத் தவறாகப் பயன்படுத்துவதற்கு வழிவகுக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

பிற அரசியல் கட்சிகளைச் சேர்ந்த நபர்கள் ஒரு கட்சியின் நட்சத்திரப் பிரசாரகர்களாக அங்கீகரிக்கப்படும்போது, பயணம், தங்குமிடம் உள்ளிட்ட அவர்களது பிரசாரச் செலவுகள், சம்பந்தப்பட்ட தொகுதிகளில் போட்டியிடும் தனிப்பட்ட வேட்பாளர்களின் தேர்தல் செலவு வரம்பில் சேர்க்கப்படாமல் விலக்கு பெறும் நிலை ஏற்படக்கூடும் என்றும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற நடைமுறை தேர்தலில் அனைத்து வேட்பாளர்களுக்கும் சமமான வாய்ப்பு என்ற கொள்கையைப் பாதிக்கும் என்றும், “சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்” என்ற தேர்தல் ஆணையத்தின் அடிப்படைக் கொள்கைக்கும் முற்றிலும் முரணானது என்றும் ஆர்.எஸ். பாரதி தெரிவித்துள்ளார்.

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951ன் 77வது பிரிவை ஆய்வு செய்தாலே, பிற அரசியல் கட்சிகளைச் சேர்ந்த மூத்த தலைவர்கள் ஒரு கட்சியின் நட்சத்திரப் பிரச்சாரகர்கள் பட்டியலில் இடம் பெற முடியாது என்பது தெளிவாகிறது என்றும்

எனவே, சட்டத்தின் 77வது பிரிவை மீறி தமிழக வெற்றிக் கழகம் வெளியிட்டுள்ள நட்சத்திரப் பிரச்சாரகர்கள் பட்டியலை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என்று தேர்தல் ஆணையத்திடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், பிற அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் தமிழக வெற்றிக் கழக வேட்பாளர்களுக்காகப் பிரச்சாரம் செய்தால், அவர்களுக்கான பயணம், தங்குமிடம் உள்ளிட்ட அனைத்து தொடர்புடைய செலவுகளையும் சம்பந்தப்பட்ட தனிப்பட்ட வேட்பாளர்களின் தேர்தல் செலவுக் கணக்கில் முழுமையாகச் சேர்க்க வேண்டும் என்றும்

சட்டப்பூர்வ விதிமுறைகளுக்கு மாறாக நட்சத்திரப் பிரச்சாரகர்கள் பட்டியலைச் சமர்ப்பித்ததற்காக, தமிழக வெற்றிக் கழகத்துக்கு எதிராக மாதிரி நடத்தை விதிமுறைகளின்படி உரிய நடவடிக்கைகளைத் தொடங்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணையத்தை அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரசியலமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ள ஜனநாயக மரபுகளைப் பாதுகாப்பதற்கும், தேர்தல் விதிமுறைகளை நிலைநிறுத்துவதற்கும், தாம் அளித்துள்ள புகார் மீது தேர்தல் ஆணையம் உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஆர்.எஸ்.பாரதி கேட்டுக்கொண்டுள்ளார்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் நமது கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் தலைமையில் மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் வீடு வீடாகச் சென்று வாக்குகள் சேகரித்தனர்.

### முதல் பருவத் தேர்வின் 1, 2 ஆம் வகுப்பு ஆங்கில கேள்வித்தாள் கசிவு!

# த.வெ.க. அரசின் பள்ளிக் கல்வித்துறையில் நிலவும் நிர்வாகச் சீர்கேடு !

## ஆசிரியர் சங்கங்கள் கடும் கண்டனம்!

*சென்னை , செப். 23-*

*ஆங்கிலப் பாட கேள்வித்தாள் கசிவு காரணமாக 1, 2ம் வகுப்பு முதல்பருவத் தேர்வு வினாத்தாள் ரத்து செய்யப்பட்ட நிலையில், புதிய கேள்வித்தாள் கொண்டு இன்று தேர்வு நடைபெறுகிறது. ஏ, பி, சி, டி கண்டுபிடிக்கும் 1ம் வகுப்பு தேர்வை கூட நடத்த முடியாத நிலையில் அரசு இருப்பதாக கண்டனங்கள் எழுந்துள்ளன. தமிழகத்தில் 1 முதல் 12ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கான முதல் பருவம் மற்றும் காலாண்டுத் தேர்வுகள் செப்டம்பர் 16ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகின்றன.*

*தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கும் பாடவாரியாக தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில், 1 மற்றும் 2ம் வகுப்பு மாணவர்களுக்கான ஆங்கிலப் பாடத் தேர்வு செப்டம்பர் 21ம் தேதி (நேற்று முள்தினம்) நடைபெறுவதாக ஏற்கனவே தேர்வு அட்டவணை வெளியிடப்பட்டிருந்தது. இதற்கான வினாத்தாள்கள் அனைத்துப் பள்ளிகளுக்கும் முன்கூட்டியே சீலிடப்பட்ட கவர்களில் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.*

*இந்நிலையில், 1ம் வகுப்பு ஆங்கிலப் பாடத்திற்கான வினாத்தாள் தேர்வு நடைபெறுவதற்கு முன்பாகவே சமூக வலைதளங்கள் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் வினாத்தாள் பரவியதாக தகவல் வெளியானது. வினாத்தாள் கசிவு தொடர்பான தகவல் அதிகாரிகளின் கவனத்துக்கு சென்றதை தொடர்ந்து, பழைய வினாத்தாளை ரத்து செய்து, அதற்குப் பதிலாக புதிய வினாத்தாளை தயாரித்து வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆசிரியர்கள் தெரிவித்தனர்.*

*இதன்படி, இன்று நடைபெறவுள்ள 1 மற்றும் 2ம் வகுப்பு ஆங்கிலத் தேர்வுக்கு புதிய வினாத்தாள் வழங்கப்பட உள்ளது. புதிதாக தயாரிக்கப்படும் வினாத்தாள்கள் மாவட்ட கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அங்கிருந்து சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. புதிய வினாத்தாள்களை உரிய முறையில் பெற்றுக் கொண்டு, ஏற்கனவே அறிவிக்கப்பட்ட தேர்வு நாளிலேயே தேர்வை நடத்தி முடிக்க வேண்டும் என தொடக்கக் கல்வித் துறை சார்பில் தலைமை ஆசிரியர்களுக்கு அவசர அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.*

*புதிய வினாத்தாள்கள் கிடைத்தவுடன் அவற்றின் பாதுகாப்பை உறுதி செய்து, உரிய நடைமுறைகளைப் பின்பற்றி மாணவர்களுக்கு தேர்வை நடத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், 1ம் முதல் 8ம் வகுப்பு வரை அனைத்து மாணவ, மாணவிகளையும் தேர்ச்சி பெற வைக்க வேண்டும் என்ற முறை அமலில் உள்ள நிலையில் 1 மற்றும் 2ம் வகுப்புக்கான ஆங்கிலப் பாடக் கேள்வித்தாள் கசிந்து விட்டதாகவும், அதற்குப் பதிலாகப் புதிய வினாத்தாள் தயாரிக்கப்பட்டு தேர்வு நடத்தப்படுவதாகவும் வெளியாகியுள்ள தகவலை கல்வியாளர்கள் உள்பட பல்வேறு தரப்பினரும் விமர்சித்துள்ளனர்.*

*ஏ.பி.சி.டி. அடையாளம் காண எழுதும் தேர்வுக்காக யுபிஎஸ்சி, நீட் வினாத்தாள் வெளியானது போல அவசர சுற்றறிக்கைகளும், கல்வி அதிகாரிகளின் பதற்றமும் ஏன் என்றும் 1ம் வகுப்பு வினாத்தாள் வெளியானது குறித்து ஆசிரியர் சங்கங்கள் கேள்வி எழுப்பியுள்ளது. இதுகுறித்து ஆசிரியர் சங்கங்களின் நிர்வாகிகள் கூறுகையில், கல்வித்துறையின் அச்சாணியே உடைந்து கிடக்கிறது.*

*பல்லாயிரக்கணக்கான ஆசிரியர் காலிப்பணியிடங்கள் நிரப்பப் படவில்லை. தகுதியுள்ள ஆசிரியர்களுக்குப் பல ஆண்டுகளாக தலைமையாசிரியர் பதவி உயர்வு வழங்கப் படவில்லை. ஆசிரியர்களின் பணிப்பாதுகாப்பு குறித்த நிச்சயமற்ற நிலை தொடர்கிறது. டெட் தொடர்பான பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கவில்லை. நிர்வாகச் சீர்கேடுகளும் நீதிமன்ற வழக்குகளும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. வகுப்பறைகளில் ஆசிரியர்களுக்கும் தலைமையாசிரியர்களுக்கும் பாதுகாப்பற்ற சூழல் தொடர்கிறது.*

*ஆனால் இவை எல்லாவற்றையும் விட இப்போது கல்வித்துறையின் தலையாயப் பிரச்சினை என்ன தெரியுமா? ஒன்றாம் வகுப்பு ஆங்கில வினாத்தாள் லீக் ஆகி விட்டதாம். ஐந்து வயதுக் குழந்தைகள் கோடு போடவும், வட்டமிடவும், ஏபிசிடி அடையாளம் காணவும் எழுதும் தேர்வுக்கான வினாத்தாள் வெளியாகி விட்டதற்காக, ஏதோ யுபிஎஸ்சி, நீட் வினாத்தாள் வெளியாகிவிட்டது போல அவசரச் சுற்றறிக்கைகளும், அதிகாரிகளிடம் பதற்றமும் காணப்படுகிறது.*

*சில ஆண்டுகளுக்கு முன்பு வரை ஆசிரியர்களே குழந்தைகளின் கற்றல் நிலைக்கு ஏற்ப வினாத்தாள் தயாரித்து, தேர்வு வைத்து, மதிப்பீடு செய்யவில்லையா?. அப்போது கல்வி அழிந்து போய் விட்டதா?. ஒன்றாம் வகுப்பு வினாத்தாளை கூட கசிய விடும் அளவில் தான் நிர்வாகத் திறன் இருக்கிறது. இன்னும் என்னென்ன விநோதங்களை எல்லாம் இந்தக் கல்விக்களம் பார்க்க வேண்டுமோ என்று பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.*